முருகப்பெருமான் துணை

**மகான் ஜனந்தனர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.07.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானகுருவே அரங்கா போற்றி
ஞானமருளி உலகை மீட்க
தானபலம் மக்களுக்கு அவசியமென
தருமவழி காட்டும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது மிதுனதிங்கள்
ஆற்றல்பட மூவைபீர் திகதி கதிர்வாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 17 ம் நாள், 02.07.2023, ஞாயிற்றுக்கிழமை)

3. வாரமதில் ஜனந்தனர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரம் காணா வண்ணமதாய்
சுத்தநெறி கொண்ட சமூகம்தனை
4. சமூகம்தனை படைத்து இனிதே
சகலருக்கும் சாத்வீக வழி
சமூக மாற்றம் கண்டு உயர
சற்குருவாய் அருளும் அரங்கன்
5. அரங்கன் வழி மக்கள் ஏற்க
ஆணவமலம் அகன்று மேவி
வரங்களாக தரும தயவுச் சிந்தை
வளர்ந்தோங்கி மாற்றம் காணும்
6. காணவே அரங்கன் தேடும்
கலியினில் சிறந்த மக்களாக
ஞானவான்களாக எண்ணிக்கை
நாளும் நாளும் நாடெங்கிலும் பெருகி

7. பெருகியே உலக மாற்றமதை
புதுமைபட படைக்கும் வண்ணம்
முருகப் பெருமான் வழிபாட்டை
முழுமனதுடன் செய்யும் பலமும்
8. பலமும் கூடி உலகமக்கள்
பண்பில் சிறந்தவர்களாகவே
வலம் வருவர் ஞானவழியில்
வதையான தீவினை அனைத்தும்
9. அனைத்தும் சுத்தி செய்யப்பட்டு
அருளுவேன் முக்காலமும் உணரும்
இணையிலா குருவருள் சக்தி
இதனுடன் திருவருளும் கிட்டி
10. கிட்டியே உலகோர் ஞானிகளாக
கேட்கும் வரமெலாம் சித்திபெற
கட்டங்களை வென்று சிறந்து
கலியின் சகல மாயைதனை கடந்து
11. கடந்து அரங்கன் வழிவழி
கலியில் கிடைத்த ஞானிகளாக
தடையற எங்கும் நிரம்பி
தரணியில் அற்புதம் படைப்பர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—